
# இராமானுஜர் வாழ்க்கை வரலாறு



## கதை தொகுப்பு

அடியேன்

கார்த்திகா சிவகுமார்

✿✿ திருமலை தரிசனம் :-

திருமலை ஆஸ்தானத்திற்கு வந்து சேர்ந்த இராமானுஜர், திருமலையின் ஏழு மலைகளையும் கீழிருந்தவாறே தரிசித்தார். திருமலை அடிவாரத்திலுள்ள பன்னிரெண்டு ஆழ்வார்களையும் சேவித்தார். கீழத்திருப்பதியில் ஜீயர் மடங்கள் உண்டு. கீழத்திருப்பதியில் கோவிந்தராஜப் பெருமாள் எழுந்தருளியுள்ளார். அவரையும் சேவித்துக் கொண்டார் சுவாமி இராமானுஜர். விட்டல ராஜா மற்றும் 30 சிஷ்யர்களுக்கு திருநாமம் சூட்டினார்.

திருச்சானூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பத்மாவதியான அலர்மேல் மங்கை தாயாரையும் கண் குளிரச் சேவித்துக் கொண்டார். அனைத்தையும் சேவித்தபின், திருமலை ஏழாவது மலையில் குடிகொண்ட ஏழுமலையானைத் தரிசிக்க வேண்டும். இராமானுஜரோ திருமலையில் கால் பதித்து நடப்பதா? என்று மலையேறிச் செல்லாமலேயே இருந்தார். ஏனெனில், திருமலையின் ஏழுமலையும் எம்பெருமான் ஸ்ரீநிவாசப்பெருமாளின் திருவுருவம் தானே. இங்கே மலையே பெருமாளாக உருவெடுத்துள்ளார். ஆகையால், திருமலைக்கு மலையேறிச் செல்ல தயங்கினார் சுவாமி இராமானுஜர்.

நான் திருமலை ஸ்ரீநிவாசனை கீழிருந்தே சேவித்துக்கொள்கிறேன் என்று பிரார்த்தித்துக் கொண்டார். ஆனால், ஏழுமலையானின் திருவுளம் வேறாக இருந்தது. கீழ்த்திருப்பதியில் தங்கியிருந்த இராமானுஜரை திருமலைக்கு வருமாறு ஆணையிட்டார் ஏழுமலையான்.

ஏழுமலைகளையும் தன் கால் பதிக்காமல் முட்டி போட்டுக்கொண்டு சென்றார். ஆழ்வார்கள், தேவதி தேவர்கள், ஏழுமலையான் திருவடி பட்ட இடங்களை என் கால்களால் மிதிப்பதா? என்று, தன் இரு கால்களையும் மடக்கி முட்டி போட்டுக்கொண்டு தவழ்ந்தே ஏழுமலைகளுக்கும் சென்றார். மலையேறும் பொழுது சுவாமி இராமானுஜரின் கால்கள் முறிந்தன. அந்த இடத்திற்கு முழங்கால் முறிச்சி என்று பெயர் ஏற்பட்டது. இன்றும் திருமலையில் 'முழங்கால் முறிச்சி' என்ற இடம் இருக்கிறது. இதைக்கண்டு பொறுக்க முடியாத ஏழுமலையான், "பக்தர்கள் அனைவரும் ஸ்ரீவைகுண்டம் வரும் பொழுது ஆதிசேஷனின் மேல் கால் பதித்து வர வேண்டும். ஆதிசேஷனின் மேல் மிதித்து, அதன் பின் தான் வைகுண்டப்பதியாக என் மடியில் அமர்வார்கள். அதுபோல, நீரும் இம்மலையில் காலடி பட நடந்து வாரும்" என்று ஏழுமலையான் சொல்ல, அதன் பின் சுவாமி இராமானுஜர் திருமலைக்கு நடந்து சென்றார்.

திருமலைக்கு சுவாமி இராமானுஜர் வருவதை அறிந்த பெரிய திருமலைநம்பிகள், அவரே மேலிருந்து கீழிறங்கி வந்து இராமானுஜரை வரவேற்றார். சுவாமி விண்ணப்பிக்கிறார், யாரோ ஒருவரை அனுப்பியிருந்தால் போதாதா? தேவரீரே எழுந்தருள வேண்டுமா? என்றார். அதைக்கேட்ட பெரியதிருமலைநம்பிகள் இந்த ஊரில் இருக்கும் நான்கு வீதிகளிலும் தேடிப்பார்த்துவிட்டேன், என்னை விட தாழ்ந்தவன் கிடைக்கவில்லை. அதனால்தான் நானே தங்களை அழைக்க வந்தேன் என்றாராம்.

தன் மருமகன் என்றும் பாராமல், வயதில் பெரியவன் என்றும் எண்ணாமல், அவரே வந்து தன்னைத் தாழ்ந்தவன் என்று சொல்வது மிகச்சிறப்பாகும். நாம் முதலில்

சொல்வோமா? உன்னை விட நான் தாழ்ந்தவன் என்று? ஆனால், நம்பிகளோ அவ்வாறு கூறிக் கொள்கிறார்.



சுவாமி இராமானுஜரும் எழுந்தருளி, திருவைகுண்டம் திருவாசலில் தண்டம் சமர்ப்பித்தார்கள். கோனேரி தீர்த்தமாகிய சுவாமி புஷ்கரணி தீர்த்தத்தில் நீராடி, கேசதாதி நாமங்களையும் சாற்றியருளினர். வீதியைப் பிரதட்சிணமாகி வலம் வந்தார்.

அகிலகில்லேன் உறையும் அலர்மேல் மங்கை மார்பனைத் தரிசிக்க உள்ளே செல்கிறார். மாட, கூட, கோபுரப் பிரகாரங்களையும் தரிசித்தார். அனந்தாழ்வான் கட்டியுள்ள நந்தவனத்திற்குச் செல்கிறார் சுவாமி இராமானுஜர். நந்தவனத்திற்கு அருகில் மகிழ மரம் இருக்கிறது. அதையே அனந்தாழ்வானாகக் கொண்டு, இன்றைக்கும் திருமலை உற்சவ மூர்த்தி மலையப்பசுவாமி அந்த இடத்திற்கு எழுந்தருளி, அனந்தாழ்வானுக்கு சகல மரியாதைகளையும் செய்தருள்கிறார்.

அனந்தாழ்வான் அப்பொழுது இருந்த காலம், சுவாமி இராமானுஜர் வருகிறார் என்றதும் சுவாமிக்கு தண்டம் சமர்ப்பித்து மரியாதை செய்தார். அவரைத் தோட்டம், நந்தவனத்திற்கு அழைத்துச் சென்று, புஷ்ப கைங்கரியங்களைக் காட்டினார். நல்ல கைங்கரியம் என்று அவரை அனுக்கிரத்து, வளர்த்ததனால் பயன் பெற்றேன் என்றருளினார் இராமானுஜர்.

"பேசுந்திரு நாம மெட்டெழுத்தும் சொல்லி நின்று, பின்னரும்
பேசு வார்த்தம்மையுய்ய வாங்கிப் பிறப்பறுக்கும் பிரானிடம், வாசமாமலர் நாறுவார் பொழில்சூழ் தருமுலகுக்கெல்லாம்,
தேசமாய்த் திகழும்மலை திருவேங்கடமடை நெஞ்சமே!".
- திருமங்கையாழ்வார்.

ஒருமுறை எட்டெழுத்து மந்திரத்தை உச்சரித்தவர்களை அப்படியே ஏற்றுக்கொண்டு அவர் இம்மை, மறுமை ஒழிக்கும் வேங்கடாஜலபதி நிற்கும், திருவேங்கடவன் நிற்கும், வாசனையுள்ள சோலைகள் சூழ்ந்த, ஒளி பொருந்திய திருமலையை, என் நெஞ்சே சரணடை என்று திருமங்கையாழ்வார் பாடியுள்ள பாசுரத்தை நினைவு கூர்ந்தார் சுவாமி இராமானுஜர்.

திருமடப்பள்ளி, யாகசாலை, திருமண்டபத்தைத் தரிசித்து - ஆனந்தநிலையம் என்ற திவ்விய விமானத்தையும் சேவித்துக்கொண்டார்.

'கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே' என்ற குலசேகராழ்வார் பிரார்த்தனையின் படி, சுவாமி புஷ்கரணியை நன்கு சேவித்துக் கொண்டார். பெருமாள் சன்னிதிக்குச் செல்லும் முன்பே வராகப் பெருமாளைத் தரிசிப்பது அவசியம். சுவாமி புஷ்கரணியில் தீர்த்தமாடி, கரையில் இருக்கும் வராகப்பெருமாளைத் தரிசித்துவிட்டு தான் ஏழுமலையானைத் தரிசிக்க வேண்டும். அப்பொழுது தான் திருமலை சென்ற முழு பலனும் கிடைக்கும்.

மாட மாளிகைகளைத் தரிசித்து, பலிபீடத்தின் அருகிலே தண்டனிட்டு பிரதட்சிணமாக எழுந்தருளி அங்கே எம்பெருமானைச் சேவித்துக் கொள்ள சென்றார்.

"அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து உன்பவள வாய்க்காண்பேனே" என்ற குலசேகராழ்வார் பாசுரத்தின் படி, குலசேகரப்படியில் கால் மிதித்து உள்ளே ஸ்ரீநிவாசனைத் தரிசிக்கச் சென்றார் சுவாமி இராமானுஜர்.

ஆனந்தமாய் திருப்படியையும் சேவித்துக் கொண்டார். அதன் உள்ளே எம்பெருமான் ஸ்ரீநிவாசன் அருள்புரிகிறார்.

🌻🌸🍁 திருமலையப்பனைத் தரிசித்தல் :-

திருவேங்கடமுடையான் என்றாலே தனி அனுபவம் தானே நமக்கெல்லாம். அவருடைய பாதாதி கேசங்களைச் சேவித்துக் கொண்டு, நீண்டு நெடிந்திருக்கக்கூடிய திருமாலைகளைச் சேவித்துக் கொண்டு, சரப்படி சரப்படியாய் அணிந்திருக்கும் காசுமாலைகளைச் சேவித்துக் கொண்டு, கைகளில் பிடித்திருக்கும் ஆழி - சங்கங்களைச் சேவித்துக் கொண்டு, வலது திருக்கையினாலே தன் திருவடியைக் காட்டி, இடது திருக்கையினாலே இத்திருவடியைப் பற்றுகிறவர்களின் சம்சாரத்தை முழங்கால் வரையே என்று காட்டி, 'குன்றமேந்தி குளிர்மலை காத்தவன்' எம்பெருமானைக் கண்ணாரத் தரிசித்தார் சுவாமி இராமானுஜர்.

'சென்று சேர் திருவேங்கட மாமலை' என்ற பாசுரத்திற்கேற்ப - திருவேங்கட மாமலையைத் தொழுதால் அது நம் எல்லா வினைகளையும் போக்கும்.

அன்று திரிவிக்கிரம அவதாரத்த எம்பெருமான் தான் - இன்று கிரியாக, மலையப்பனாக - திருமலையிலே சேவை சாதிக்கிறார். இவை அத்தனையையும் நினைத்துக்கொண்டு, ஆழ்வார்கள் எம்பெருமானின் திருவடிகளில் சரணாகதியடைந்தார்கள் என்றெல்லாம் எண்ணி, தானும் திருமலையப்பனைக் கண்டு பூரித்து நின்றார்.

நித்ய சூரிகள் தானே எப்பொழுதும் திருமலையில் இருப்பார்கள். அதனால் தாம் இருக்க விரும்பவில்லை. நித்ய சூரியர்கள் கைங்கரியம் பண்ணட்டும் என்று சொல்லி திருமலையில் இருந்து கீழே இறங்கப் பார்த்தார் சுவாமி இராமானுஜர்.

அப்பொழுது பெரியதிருமலைநம்பிகள் மூன்று இரவுப்பொழுது இங்கு தங்க வேண்டும் ஆணையிட, மூன்று இரவும் தங்கிய பிறகு கீழே இறங்கி வந்தார் சுவாமி இராமானுஜர்.

கீழ்த்திருப்பதியிலே சில தினங்கள் தங்கியிருந்தார். அப்பொழுது தான் பெரியதிருமலைநம்பிகள் நித்தியப்படி மலையில் இருந்து கீழே இறங்கி வந்து இராமானுஜருக்கு "இராமாயணம் காலட்சேபம்" சாதித்தார். ஆக,

1. பெரிய நம்பிகள் - த்வய அர்த்தம்
2. திருக்கோட்டியூர் நம்பிகள் -திருமந்திரம், சரமஸ்லோகம்
3. திருமாலையாண்டான் - ஆயிரம் திருமொழி
4. ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையார் - மூவாயிரத்தையும், ஆச்சாரிய நிஷ்டையும் கொடுத்தார்.
5. இனி, பெரியதிருமலைநம்பிகள் இராமாயண அர்த்தத்தை கொடுக்க இருக்கிறார்.

பெரியதிருமலைநம்பிகள் காலட்சேபம் பண்ணுதல் :-

இராமானுஜரோ திருமலையில் இருக்க மாட்டேன் என்று, கீழ்த்திருப்பதியில் வந்து தங்கியிருக்கிறார். நாமோ இராமாயண அர்த்தத்தை காலட்சேபம் பண்ணியாக வேண்டும் என்று யோசித்தார் பெரியதிருமலைநம்பிகள்.

ஆகாசகங்கையில் இருந்து தீர்த்தம் எடுத்துச் சென்று ஏழுமலையானுக்கு நித்திய கைங்கரியம் பண்ண வேண்டும் நம்பிகளுக்கு. இராமானுஜருக்கு காலட்சேபம் பண்ண வேண்டும் என்றால் மேலிருந்து கீழிறங்கியாக வேண்டும்.

பெரியதிருமலை நம்பிகளோ தினமும் ஆகாசகங்கையில் இருந்து தீர்த்தம் எடுத்து - ஶ்ரீநிவாசப் பெருமாளுக்கு நித்திய கைங்கரியம் பண்ணிவிட்டு - திருமலையில் இருந்து வேக வேகமாக கீழிறிங்கி நாள் முழுவதும் ஶ்ரீராமாயணம் காலட்சேபம் பண்ணிவிட்டு, மதியம் கீழிருந்து புறப்பட்டு இரவுப்பொழுதிற்குள் திருமலைக்குச் சென்றுவிடுவார். இதேபோல் நித்யமும் செய்தார் பெரியதிருமலை நம்பிகள்.

அதிகாலை எழுந்து ஆகாசகங்கைக்குச் சென்று தீர்த்தக் கைங்கரியம் பண்ணிவிட்டு, மலையிலிருந்து கீழிறங்கி இராமாயணம் சொல்லிக் கொடுக்க வேண்டும். திரும்ப மேலே திருமலைக்குச் செல்ல வேண்டும்.

இவ்வளவு தூரம் பெரியதிருமலை நம்பிகள் கஷ்டப்பட்டு இராமாயண அர்த்தத்தை இராமானுஜருக்குக் கொடுத்திருப்பார் என்றால், ஆச்சாரியாரான யமுனாச்சாரியார் என்ற ஆளவந்தார் விட்டுப்போன சொத்தை இளவரசனான இராமானுஜரிடம் பழுதாகாமல் கொடுத்துவிட வேண்டும். இந்தக் கடமை உணர்வு. அந்த உணர்வு இருப்பதால் தான், இப்பேர்ப்பட்ட கைங்கரியம் செய்தார். கோவிலில் அதோடுமட்டுமல்ல ஶ்ரீராமாயணம், என்பது சாமானிய அர்த்தமா? இராமாச்சந்திரமூர்த்தியுடையவாழ்க்கை சரித்திரங்கள் இராமானுஜருக்குத் தெரியாமல் யாருக்குத் தெரியும்?. இராமன் பண்ண கைங்கரியம், இலட்சுமணன் பண்ண கைங்கரியத்தை இராமானுஜர் தானே இனி பண்ணப்போகிறார். ஆகையால் தான் ஶ்ரீராமாயண அர்த்தத்தை கேட்டுக்கொண்டார் இராமானுஜர்.

படி கொண்ட கீர்த்தி இராமாயணம் பக்தி வெள்ளம் குடி கொண்ட கோவில் இராமானுஜர். படி கொண்ட கீர்த்தி - இராமாயணம். இராமாயணம் என்ற பக்திவெள்ளமே இராமானுஜரின் திருவுள்ளத்திலே கோவில் கொண்டிருக்கும். இராமானுஜரின் திருவுள்ளத்திலே ஒரு அணையாத விளக்கு எரிந்து கொண்டே இருக்கும். அது தான் ஶ்ரீராமாயணம் என்ற விளக்கு. அந்த விளக்கு எப்பொழுதும் எரிந்து கொண்டு இருக்கும். பெரியதிருமலை நம்பிகளிடத்திலும் காலட்சேபம் முடிந்தது. அத்தோடு ஐந்து ஆச்சாரியாரிடத்திலே காலட்சேபம் கேட்டு முடித்துவிட்டார்.

இனி இராமானுஜர் பாரத தேசம் முழுக்க திக்விஜயமாகப் புறப்படப் போகிறார். என்ன நடந்தது? என்ற சரித்திரத்தை இனி வரும் பதிவுகள் மூலம் அறியலாம்.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿

பதிவு : 56 :-

இதுவரை சுவாமி இராமானுஜர் ஐந்து ஆச்சாரியார்களிடம் காலட்சேபம் பெற்றதை அறிந்தோம். இனி, இராமானுஜர் பாரததேசம் முழுவதும் திக்விஜயமாகப் புறப்படப் போகிறார். என்ன நடந்தது? என்ற சரித்திரத்தை இனி வரும் பதிவுகளின் மூலம் அறியலாம்.

🌼✿🍁 திருமலையில் தரிசனம் :-

இராமானுஜர் திருமலை திருப்பதிக்கு மலையேறிச் செல்லும் பொழுது நடந்த ஒரு சம்பவம்.

இராமானுஜர் திருமலை திருப்பதிக்கு திருவேங்கடமுனைத் தரிசிக்க மலையேறினார் அல்லவா. மலையேறிச் செல்லும் பொழுது வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததால், அவரும் அவரது சிஷ்யர்களும் மிகவும் சோர்ந்து போனார்கள். வழி வேறு சரியாகத் தெரியவில்லை. மலை நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஒரே காடு.

அப்பொழுது ஒரு சிறுபிள்ளை ஒருவன் வந்தான். சுவாமி களைப்பினால் அமர்ந்திருந்தார். வந்திருந்த சிறுபிள்ளையோ மிகவும் தேஜஸ் உடையவனாக இருந்தான். சுவாமியின் அருகில் வந்து வெள்ளி கிண்ணத்திலே நன்றாகக் குலைத்து செய்திருந்த தயிர் அன்னத்தையும், ஒரு மாம்பழத்தையும் எடுத்துவந்தான். சுவாமியிடம் சென்று 'இந்தாரும், இதை நீர் சாப்பிடலாம்' என்று கொடுத்தான் சிறுபிள்ளை. அப்பிள்ளை வேறு யாரும் இல்லை. உலகத்திற்கே ஒரே நாயகனாய், தனிப்பெருந் தெய்வமாய், ஆழ்வார்களாலே கொண்டாடப்பட்ட திருவுடைய தேவனான திருவேங்கடமுடையான்.

அவனே சிறுபிள்ளையாக வந்து இராமானுஜருக்கு, நாம் ஏதாவது சமர்ப்பிக்க வேண்டும். நமக்கு அனந்தாழ்வானை அனுப்பிவைத்து, இவ்வளவு பெரிய புஷ்பக் கைங்கரியம் பண்ணினாரோ இல்லையோ? அவருக்கு நாம் ஏதேனும் செய்ய வேண்டும் என்பதற்காக, இராமானுஜரிடம் கொடுத்தார் பிரசாதத்தை. சுவாமி இராமானுஜரோ உடனே வாங்கிவிடவில்லை.

நீ யார் என்று சொல்லு சிறுபிள்ளையே. நான் யார் யாரோ கொடுக்கும் அன்னத்தை பெற்றுக்கொள்ள மாட்டேன் என்றார் சுவாமி.

இராமானுஜர் : உன் ஆச்சாரியான் யாரு?

சிறுபிள்ளை : இருக்கே. எனக்கு ஆச்சாரியான் இருக்கிறாரே. எனக்கு ஆச்சார்ய சம்பந்தம் உண்டு. (உலகளக்கும் பகவனுக்கே ஆச்சாரிய சம்பந்தமா).

இராமானுஜர் : அப்போ உன் ஆச்சாரியாரின் தனியன் சொல்லு

சிறுபிள்ளையும் சளைக்கவே இல்லை. உடனே பதில் சொல்ல ஆரம்பித்து விட்டான்.

சிறுபிள்ளை : "அகிலாத்ம விநாவாசம் அக்ஞான திமிராரகம் ஆஸ்ருதானாம் சுஸ்ஸரணம் வந்தே அனந்தார்ய தேசிகன்".

(ஸ்லோகத்தில் பிழை இருப்பின் ஸ்ரீவைஷ்ணவ ஆச்சாரியார்கள் மன்னிக்கவும்).

அனந்தாழ்பிள்ளை அனந்தாழ்வானையே தனது ஆச்சாரியாராக ஏற்றுக்கொண்டார் எம்பெருமான் ஏழுமலையான். அவர் தானே எல்லா கைங்கரியங்களையும் பண்ணார். அனந்தாழ்வானே எனது ஆச்சாரியார்.

அகிலாத்ம விநாவாசம் - எல்லா குணங்களுக்கும் இருப்பிடமாய்
அக்ஞான திமிராரகம் - அக்ஞானமான இருட்டினை ஒழிப்பவராய்
ஆஸ்ருதானாம் சுஸ்ஸரணம் : அடியவர்கள் ரொம்ப சுலபமாய் அவர் திருவடிகளை பற்றும்படி எளிமையோடு இருப்பவராய், அப்பேர்ப்பட்ட அனந்தார்ய தேசிகனான அனந்தாழ்வானை
வந்தே - வணங்குகிறேன் - என்பது இப்பாசுரத்தின் அர்த்தம்.

இதைக்கேட்ட சுவாமி,

இராமானுஜர் : நீ அனந்தாழ்வான் சிஷ்யன். கொடுப்பாயாக.

என்று கூறி சிறுபிள்ளை கொண்டுவந்த பிரசாதத்தை பெற்றுக்கொண்டார்.

சிறுபிள்ளை : சிறுபிள்ளையின் (Mind voice) MV இவருகிட்ட பரீட்சை எழுதி தேருவதற்குள்ளே போதும், போதும் என்றிருக்கிறது நம்மிடத்திலே. நாம ஒருத்தருக்கும் இதுவரை பயந்ததில்லை.வேதத்தில் பிரம்மாவில் இருந்து, ஒவ்வொருத்தருக்கும் என்னைக் கண்டு பயப்படுகிறார்கள்.

நாம் போய் இவரைக் கண்டு பயப்படுகிறோமே, என்று நினைத்து இராமானுஜரிடம் விடை பெற்றுச் சென்றுவிட்டார்.

சுவாமி இராமானுஜர் பிரசாதத்தை வாங்கினார் அல்லவா. அந்த இடத்தை இப்பொழுதும் நாம் திருமலை சென்றால் தரிசித்துக் கொள்ளலாம்.

திருவேங்கடத்திற்கு மலையேறிச் செல்லும் பொழுது, மேல்த்திருப்பதி போய்ச் சேரும் முன்பாக, வழி எம்பெருமானார் சன்னதி ஒன்று உள்ளது. அதனருகே ஒருபாறையில் அமர்ந்து கொண்டு, இந்த பிரசாதத்தை சாப்பிட்டுவிட்டு, அந்த மாம்பழ கொட்டையை கீழே போட்டிருக்கிறார் சுவாமி. அந்த மாங்கொட்டை மண்ணில் புதைந்து பெரிய மாமரமாக முளைத்து, அதை சில அன்பர்கள் பேணிப்பாதுகாத்து, இன்றளவும் பராமரித்து வைத்திருக்கிறார்கள்.

அந்த மாமரம், அதனுடைய விழுது, அதனுடைய விழுது என வரிசையாக மரங்கள் முளைத்துள்ளன. இது வழி எம்பெருமானாருடைய சரித்திரம். அனந்தாழ்வான் இதைக்கேட்டு, மிகவும் ஆனந்தப்பட்டார். நல்ல வேளை இந்த பிள்ளையை நாம வளர்த்ததிற்கு, சிஷ்யனாய் ஏற்றுக்கொண்டதற்கு, நல்ல கைங்கரியம் பண்ணினான். இது சுவாமி திருமலை திருப்பதிக்கு மலையேறிச் செல்லும் வழியில் நடந்த சரித்திரம்.

இதன் பின் தான் பெரியதிருமலை நம்பிகள் இராமானுஜருக்கு காலட்சேபம் பண்ணினார் என்று நாம் ஏற்கெனவே அறிந்திருக்கிறோம் அல்லவா.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿

**தொடரும். . .**